IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW4

Defense :

Name : வேலு

Father's Name : லோகநாதன்

Village : சேவூர்

Taluk : ஆரணி

Caste :

Calling : ஓட்டல் வைத்துள்ளேன்

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.01.2025.

**முதல் விசாரணை**

**1. எதிரி ஆஜர்.**

2. நான் தற்போது 506/2 கங்கையம்மன் கோவில் தெரு, சேவூர் ஆரணியில் வசித்து வருகிறேன். ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா 2, 3 ஆகியோரை தெரியும். அ.சா.1 பூங்காவனத்தை தெரியும். 20.03.2021 அன்று மாலை 03.00 மணிக்கு நானும் ஞானவேல் என்பவரும் ஆரணி நகராட்சி அலுவலகம் நோக்கி சென்று கொண்டிருந்தோம். அப்போது எதிரிக்கும் அ.சா.1 ம் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

3. அந்த சமயம் நாங்களும் எதிரியிடம் பணம் கேட்க சென்றோம். ஏற்கனவே எதிரியும் அ.சா.1ம் பணம் சம்மந்தமாக பேசிக்கொண்டு இருந்ததால் நாங்கள் அமைதியாக நின்றுவிட்டோம். அப்போது அவர்களுக்குள் பேச்சுவார்த்தை முற்றி எதிரி பக்கத்தில் இருந்த உருட்டு கட்டையை எடுத்து பணம் கேட்டால் உன்னை அடிப்பேன் என்றும் உன்னை அடித்தால் இனி யாரும் ஊரில் பணம் கேட்க மாட்டார்கள் என்று சொல்லி அ.சா1 ன் தலையில் அடிக்க வந்தார். அந்த அடி அ.சா.1ன் தோல் பட்டையில் பட்டுவிட்டது. அ.சா1 மயங்கி விழுந்துவிட்டார். அங்கிருந்தவர்கள் கூச்சல் போட்டவுடன் எதிரி அவரது வண்டியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

4. நானும் ஞானவேலுவும் மயங்கி கிடந்த அ.சா.1 ஐ இருசக்கர வாகனத்தில் ஆரணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அ.சா.1க்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. போலீசார் அ.சா.1 ஐ விசாரணை செய்தார்கள். போலீஸ் விசாரணையில் நான் நடந்ததை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 மயக்க நிலையில் இருந்து எப்போது தெளிவடைந்தார் என்றால் மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட 15 நிமிடங்களில் மயக்கம் தெளிந்தார். சம்பவம் நடந்த நேரம் 03.00 மணி இருக்கும். சம்பவ இடத்திலிருந்து ஆரணி அரசு மருத்துவமனை 300 மீட்டர் தொலைவு இருக்கும். அ.சா1 ஐ சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்ல கால் மணி நேரம் ஆகியிருக்கும்.

2. அ.சா1 ஐ மருத்துவமனையில் சேர்த்த போது அ.சா.1 பற்றிய அவரது பெயர் முகவரியை நான் தான் மருத்துவமனையில் தெரிவித்தேன். மருத்துவமனையில் அ.சா.1 ஐ யார் எந்த இடத்தில் அடித்தார்கள் என்ற விவரத்தை நான் தான் தெரிவித்தேனா என்றால் நான் தான் தெரிவித்தேன்.

3. சம்பவத்தின் போது எதிரி அ.சா1 ஐ அடித்த போது அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தேனா என்றால் இல்லை. நான் எதிரியிடம் எங்கள் ஊரில் தேர்தலில் நிற்பதற்காக பணம் வாங்கி இருந்தேன் என்றால் இல்லை. எதிரியிடம் நான் வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்றும் ' மேலும் எதிரி நடத்தி வந்த சீட்டு தொகையினை கொரோனா காலகட்டத்தில் திருப்பி கொடுக்க முடியாத சூழ்நிலையால் எதிரி திருப்பி கொடுக்க இயலவில்லை என்றும் அதை பயன்படுத்தி கொண்டு நான் எதிரியிடம் வாங்கிய பணத்தை திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல.

4. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சீட்டு பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்பது குறித்து நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அவ்வாறு எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை. காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் விசாரித்து சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைப்பதாக சொன்னார்கள். அதன் பிறகு நான் கொடுத்த புகாரின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. எதிரியிடம் இருந்து பணம் வாங்க வேண்டும் என்ற தவறான எண்ணத்தில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. அ.சா.1 மருத்துவமனையில் போலீசார் விசாரணை செய்தபோது நான் உடன் இருந்தேனா என்றால் போலீசார் வந்து சிறிது நிமிடம் நான் இருந்தேன். அதன்பிறகு நான் புறப்பட்டு விட்டேன். என்னுடன் ஞானவேலுவும் வந்துவிட்டார். எதிரி மீது சீட்டு சம்மந்தமாக புகார் எழுந்ததால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பதால் ஒரு புகார் எதிரி மீது பதிவு செய்யப்பட்டது என்றும் அதில் நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.